# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 60 / 2021 நாள்: 08.12.2021

**மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சி தலைவர்கள் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் நாளை (09.12.2021) வெளியிடப்படுகிறது.**

நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தலுக்காக மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் நாளை (09.12.2021) தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சி தலைவர்கள் அவர்களாலும் பெருநகர சென்னை மாநகராட்சியினை பொருத்தமட்டில் மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களாலும் வெளியிடப்படவுள்ளது. வாக்காளர் பட்டியல் வெளியிடுவது தொடர்பாகவும் தேர்தல் தொடர்பான அனைத்து முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்தும் இன்று (08.12.2021) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சி தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது. மேற்படி கூட்டத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்களும் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்காளர் பட்டியல் வழங்குதல், காலி பதவியிடங்களாக உள்ள தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஆகியவற்றை விரைந்து நிரப்பிடவும், தேர்தலை அமைதியான முறையில் நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திலிருந்து, கோவிட்-19 தடுப்பு மருந்துகள் பெறுதல், விநியோகம் செய்தல் குறித்தும் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி குறித்த விவரங்களை பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு வழங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து சிசிடிவி கேமரா பொருத்துதல், வாக்குப்பதிவினை நேரலையாக கண்காணித்தல், நுண் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்தல், வாக்கு எண்ணுகை மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், வாக்கு எண்ணுகை மையங்களை இறுதி செய்தல் குறித்தும் மற்றும் வாக்குப்பதிவு பொருட்களின் இருப்பினை உறுதி செய்திடவும் இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி ஆய்வுக்கூட்டத்தில், கூடுதல் காவல் துறை இயக்குநர் திரு. ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு விசுமகாஜன், இ.ஆ.ப., காவல் கண்காணிப்பாளர் (நில அபகரிப்பு பிரிவு) திரு டி.மகேஷ்குமார், இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு கி.அ. சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

8/12/2021

மக்கள் தொடர்பு அலுவலர்